நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

June 2017

2017

தரம் : இடைநிலை மேற்பிரவு (ஆண்டு 9, 10)
Level : Intermediate Upper (Year 9 & 10)

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 70 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தருக.

கொண்டாட்டங்கள்

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங்குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

இது 'ஆடிப்பிறப்பு' என்ற கொண்டாட்டம் பற்றிச் சோமசுந்தரப் புலவர் இயற்றிய பாடல் வரிகளாகும். தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு என்பன தமிழர்களது கொண்டாட்டங்கள் ஆகும். தீபாவளி, ரமழான், நத்தார் போன்றவை அறநெறி சார்ந்த கொண்டாட்டங்கள் ஆகும். மக்களது நடையுடை, உணவு, மொழி, கலை, பழக்கவழக்கங்கள் முதலான மரபினை வெளிப்படுத்தும் நடைமுறைகள், கலாசாரம் எனப்படும். கலாசாரம் இன, மத அடிப்படையில் மக்களுக்கிடையில் வேறுபடுகின்றது. இறைநெறி சார்ந்த கலாசாரக் கொண்டாட்டங்கள் அவற்றை நன்கு புலனாக்குகின்றன.

கலாசாரங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டாலும் அவற்றிடையே ஒருவித பொதுத்தன்மை காணப்படுகின்றது. பெரியோரைப் பணிதல், பிறரை மதித்தல், பசித்தோர்க்கு உணவளித்தல், ஒன்று சேர்ந்து உண்டு மகிழ்தல், பொது நிகழ்ச்சிகளில் ஒன்று சேருதல் போன்ற மனித விழுமியங்களை எல்லாக் கலாசாரங்களும் பேணுகின்றன. எமது கலாசாரக் கொண்டாட்டங்களின் போதும் இவற்றை உணரலாம்.

கொண்டாட்டம் என்றால் ஒரே குதூகலந்தான். நாளாந்தம் உழைத்து வாழும் மக்கள், கொண்டாட்ட நாளன்று ஓய்வெடுத்து, வகை வகையாக பலகாரங்களை அனைவருடனும் ஒன்று சேர்ந்து உண்டு மகிழ்வர். உடலுக்கு ஓய்வையும் மனதுக்கு நிறைவையும் கொண்டாட்டங்கள் வழங்குகின்றன.

உழவர்கள் கதிரவனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகக் கொண்டாடப்படுவது தைப்பொங்கல். புதுப்பானையில் புத்தரிசியிட்டு பொங்கல் பொங்கி, எல்லோருடனும் பகிர்ந்துண்ணுவது இதன் மரபு. முற்றத்தில் கோலமிடுதல், மாவிலை தோரணங்கள் கட்டுதல் இக்கொண்டாட்டத்தின் கலாசாரம் சார்ந்த பண்புகளாகும்.

குடும்ப அளவிலான கொண்டாட்டங்களிலும் மனித விழுமியப் பண்புகள் மிளிர்வதைக் காணலாம். திருமணம், புதுமனை புகுதல் போன்ற நிகழ்வுகளும் கலாசாரப் பண்புகள் சார்ந்தவவையாகும். திருமணத்தை எடுத்துக் கொண்டால் அதன் சடங்குகள் இன, மத அடிப்படையில் வேறுபடுகின்றன. கொண்டாட்ட முறைகளும் உணவு முறைகளும் கலாசார அடிப்படையில் வேறுபட்டாலும் எல்லோரும் கலந்து கொள்ளும் பண்பு அவற்றில் காணப்படும் சிறப்பான ஓர் உள்ளீடாகும். கொண்டாட்டங்களின் போது உறவினரும் அயலவரும் உவந்து உதவி செய்வதும் சிறந்ததொரு பண்பாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்தல் என்ற பண்பு இதனால் கட்டி வளர்க்கப்படுகின்றது.

கொண்டாட்டங்கள் மனித வாழ்க்கையோடு இணைந்த நிகழ்வுகள் எனலாம். மனித வாழ்க்கையின் பண்பாடுகளை வெளிப்படுத்தி, மக்கள் அனைவரும் ஒருவரையொருவர் மதித்து வாழ்வதற்குக் கொண்டாட்டங்கள் துணை புரிகின்றன.

1. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை எனப் பாடியவர்
   (a) பாரதியர்
   (b) விபுலாநந்தர்
   (c) சோமசுந்தரப்புலவர்
   (d) சின்னத்தம்பிப் புலவர்

2. மக்களது நடையுடை, உணவு, மொழி, சுவை, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை வெளிப்படுத்தும் இயல்பு
   (a) கலாசாரம்
   (b) கலையுணர்வு
   (c) விழுமியங்கள்
   (d) கலைகள்

3. ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்தல் எனும் பண்பை வளர்ப்பது
   (a) உதவுதல்
   (b) கூட்டுக்குடும்பம்
   (c) பண்பாடு
   (d) மதம்

4. கலாசாரப் பண்பு நிறைந்த கொண்டாட்டம்
   (a) திருமணம்
   (b) தீபாவளி
   (c) ரமழான்
   (d) நத்தார்

5. கோலம், மாவிலை, புதுப்பானை என்பவற்றை நினைவுபடுத்தும் கொண்டாட்டம்
   (a) ஆடிப்பிறப்பு
   (b) தீபாவளி
   (c) தைப்பொங்கல்
   (d) நத்தார்

வினாக்கள் 6 – 10 : பின்வரும் வாக்கியங்களில் பிழையாக எழுதப்பட்ட சொல்லின் சரியான சொல்லைத் தெரிவு செய்க.

6. நாளை பரிசலிப்பு விழா நடைபெறும்.
   (a) பரிசளிப்பு
   (b) பரிசாளிப்பு
   (c) பரிசழிப்பு
   (d) பரிசளிபு

7. புளம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது அடையாளத்தைப் பேணி வருகின்றனர்.
   (a) புழம்பெயர்ந்த
   (b) புலம்பெயர்ந்த
   (c) புலம்பேந்த
   (d) புளம்பெயர்த

8. தமிழ்மொழியினை அடுத்த தலைமுறையினரிடம் தகுந்த முறையிற் கையழிக்க வேண்டும்.
   (a) கையலிக்க
   (b) கையளிக்க
   (c) கையாளிக்க
   (d) கையழிக

9. இலமையிற் கல்வி சிலையில் எழுத்து.
   (a) இழமையிற்
   (b) இளமையிற்
   (c) இலமயிற்
   (d) இழமயிற்

10. அறம் செய்ய விறும்பு.
   (a) விரும்பு
   (b) விறுப்பு
   (c) விருப்பு
   (d) வீறும்பு

வினாக்கள் 11 – 25 : பின்வரும் இலக்கியப் பாத்திரப் படைப்புகளை தொடர்புபடுத்துக.

a) சிலப்பதிகாரம்
b) கம்பராமாயணம்
c) சீவகசிந்தாமணி
d) மகாபாரதம்

11. சீவகன் _____

12. சுக்கிரீவன் _____

13. குகன் _____

14. மாதவி _____

15. துரியோதனன் _____

வினாக்கள் 16 – 20 : பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. ஆகா! என்ன அழகு!
   இது எந்த உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது?
   (a) வியப்பு
   (b) இரக்கம்
   (c) மகிழ்ச்சி
   (d) இழிவு

17. பின்வருவனவற்றில் இன்பம் அல்லாத சொல் எது?
   (a) உவகை
   (b) களிப்பு
   (c) மகிழ்ச்சி
   (d) துன்பம்

18. முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம் எது?
    (a) சங்க காலம்
    (b) பல்லவர் காலம்
    (c) சோழர் காலம்
    (d) நாயக்கர் காலம்

19. பொய்யாமொழிப் புலவர் எனப் போற்றப்படுபவர் யார்?
    (a) கம்பர்
    (b) வள்ளுவர்
    (c) இளங்கோ
    (d) ஔவையார்

20. சங்ககாலத்தில் மலையும் மலை சார்ந்த பிரதேசம் எப்படி அழைக்கப்பட்டது?
    (a) முல்லை
    (b) குறிஞ்சி
    (c) மருதம்
    (d) நெய்தல்

வினாக்கள் 21 - 24 : பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தழிழ்ச் சொற்களைத் தெரிவு செய்க.

(a) பதிவேற்றம்
(b) வலையொளி
(c) இயங்கலை
(d) தரவிறக்கம்

21. Download _____

22. Upload _____

23. Online _____

24. Youtube _____

வினாக்கள் 25 – 29 : வேறுபட்ட சொல்லினைத் தெரிவு செய்க

25. (a) மகன (b) முதல்வன் (c) புதல்வன் (d) புத்திரன்

26. (a) புதல்வி (b) மகள் (c) புத்திரி (d) துணைவி

27. (a) பாங்கன் (b) சினேகிதன் (c) சினேகிதி (d) நண்பன்

28. (a) மார்கழி (b) சித்திரை (c) ஆவணி (d) ஞாயிறு

29. (a) நிலா (b) சூரியன் (c) பகலவன் (d) ஆதவன்

வினாக்கள் 30 – 32 : பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

(a) குடுகுடு
(b) விறுவிறு
(c) கலகல
(d) சலசல

30. நீர் _____ என்று ஓடியது.

31. குழந்தை _____ என்று சிரித்தது.

32. பாட்டி _____ என்று நடந்தாள்.

வினாக்கள் 33 – 36 : பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(a) அத்தை
(b) மாமா
(c) சித்தப்பா
(d) பெரியப்பா

33. உனது தாயார் எனது சகோதரி. நான் உனக்கு என்ன உறவு? _____

34. உனது தந்தை எனது இளைய சகோதரர். நான் உனக்கு என்ன உறவு? _____

35. உனது தாயார் எனது கணவரின் சகோதரி. நான் உனக்கு என்ன உறவு? _____

36. உனது தந்தை எனது மூத்த சகோதரர். நான் உனக்கு என்ன உறவு? _____

வினாக்கள் 37 – 40

37. முக்கனிகள் _____ _____ _____
38. மூவேந்தர் _____ _____ _____
39. முச்சங்கம் _____ _____ _____
40. முத்தமிழ் _____ _____ _____

41. எழுத்து ஆக்கம் - பின்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

‘தமிழ் மொழி கற்றலின் அவசியம்’ என்ற தலைப்பில் தமிழ் மாணவர்கள் மத்தியில் பேசவுள்ளீர். உமது பேச்சினை எழுதுக.

அல்லது

‘பல்கலாசார சூழல்’ பற்றி தமிழ்பேசும் நாடொன்றில் வாழும் உமது நண்பருக்குக் கடிதம் ஒன்றினை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2017